A consumer is the important visitor on our premises.
He is not dependent on us. We are dependent on him.
-Mahatma Gandhi

# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

4th Floor, SIDCO Corporate Office Building, Thiru-vi-ka Industrial Estate,
Guindy, Chennai – 600 032.
Phone : ++91-044-2953 5806, 044-2953 5816 Fax : ++91-044-2953 5893
Email : tneochennai@gmail.com Web site : www.tnerc.gov.in

**முன்னிலை: திரு. ந. கண்ணன், மின்குறைதீர்ப்பாளர்**

**மேல்முறையீட்டு மனு எண் 61 / 2023**

திருமதி J. மணிமாலா,
க/பெ. C.ஜெயபால்,
859, திருவள்ளுவர் தெரு, அம்பூர்பேட்டை,
வாணியம்பாடி, திருப்பத்தூர் மாவட்டம்.

……..மேல்முறையீட்டாளர்
(Rep. by திரு க/பெ. C.ஜெயபால்)

எதிர்

1) செயற்பொறியாளர்/ இ&ப/ வாணியம்பாடி,
திருப்பத்தூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
110 KV துணை மின் வளாகம்,
வாணியம்பாடி, வேலூர் – 635 751.

2) உதவி செயற்பொறியாளர்/ இ&ப / பகிர்மானம்/ வாணியம்பாடி,
திருப்பத்தூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
110 KV துணை மின் வளாகம்,
வாணியம்பாடி, வேலூர் – 635 751.

3) உதவி மின்பொறியாளர்/ இ&ப / நகரம்/வாணியம்பாடி,
திருப்பத்தூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
110 KV துணை மின் வளாகம், வேலூர் மெயின் ரோடு,
ஆலங்காயம், வாணியம்பாடி தாலுக்கா, வேலூர் – 635 751.

. . . எதிர்மனுதாரர்கள்
(திரு R. பாட்ஷா முகமது, செயற்பொறியாளர்/ இ&ப/ வாணியம்பாடி
திரு A. இக்பால் அஹமது, உதவி செயற்பொறியாளர்/ இ&ப / பகிர்மானம்/ வாணியம்பாடி
திரு K. ரமேஷ், உதவி மின்பொறியாளர்/ இ&ப / நகரம்/வாணியம்பாடி)

**மனு பெறப்பட்ட நாள்: 14-08-2023**

**கேட்புரை நாள்: 12-10-2023**

**ஆணை நாள்: 03-11-2023**

14.08.2023 அன்று பெறப்பட்ட திருமதி J. மணிமாலா, க/பெ. C.ஜெயபால், 859, திருவள்ளுவர் தெரு, அம்பூர்பேட்டை, வாணியம்பாடி, திருப்பத்தூர் மாவட்டம் அவர்களின் மனு மேல்முறையீட்டு மனு எண் 61/2023 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மனுவின் மீது மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை 12.10.2023 அன்று நடைபெற்றது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலு ரையிலுள்ள வாதங்கள் மற்றும் இருதரப்பினராலும் கேட்புரை நாளில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

## ஆணை

**1. மேல்முறையீட்டாளரின் கோரிக்கை**

தனது மின் இணைப்பு எண் 08-421-006-182-ஐ மறு மின் இணைப்பு வழங்குமாறும் தனக்கு ஏற்பட்ட மன உளைச்சல் மற்றும் பண இழப்பு காரணமாக ரூ.50,000/- இழப்பீடு வேண்டியும் மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளார்.

**2.0 வழக்கின் சுருக்கம்:**

2.1 தனது வர்த்தக மின் இணைப்பு எண் 08-421-006-182-ஐ மறு மின் இணைப்பு வழங்குமாறு மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளார்.

2.2 மேற்கண்ட விண்ணப்பத்தின் அடிப்படையில் இடத்தை கள ஆய்வு செய்த போது மின்இணைப்புகளின் கட்டிடம் முழுமையாக முடிக்கப்படாமல் சுமார் 80% கட்டிமுடிக்கப்பட்ட நிலையில் கட்டுமான பணி நடைபெற்று வந்ததை கண்டறிந்ததால் கட்டிட நிறைவு சான்று சமர்ப்பித்தால் மறு மின் இணைப்பு வழங்க இயலும் என எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

2.3 மறு மின் இணைப்பு வேண்டி மேல்முறையீட்டாளர் திருப்பத்தூர் மின்பகிர்மான வட்டம், மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தை 11.05.2023 அன்று அணுகியுள்ளார்.

2.4 மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம், திருப்பத்தூர் மின் பகிர்மான வட்டம் 15.06.2023 அன்று தன்னுடைய ஆணையை அளித்துள்ளது. மன்றம் அளித்த தீர்ப்பில் அதிருப்தியுற்றதால் இந்த மேல்முறையீட்டு மனுவினை மேல்முறையீட்டாளர் மின்குறைதீர்ப்பாளரிடத்தில் சமர்ப்பித்துள்ளார்.

**3.0 மன்றத்தின் தீர்வு :**

3.1 திருப்பத்தூர் மின்பகிர்மான வட்டம் , மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் தன்னுடைய தீர்வை 15.06.2023 நாளிட்ட ஆணையில் தெரிவித்துள்ளது . அந்த ஆணையின் சம்பந்தப்பட்ட பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"மன்றத்தின் தீர்வு:*

*மனுதாரர் மின் இணைப்பு எண் .08–421–006–182 ஐ மறுமின் இணைப்பு பெற கட்டிட முடிவு சான்று அளிக்கும்பட்சத்தில் வாரிய விதிகளின்படி நடவடிக்கை எடுத்திடவும் கட்டிட முடிவு சான்று பெறாமலேயே மறு மின் இணைப்பு கணினியில் பதிவு செய்த வணிக ஆய்வாளர் மீதும் மின்னளவி இல்லாமலேயே மின் கணக்கீட செய்த கணக்கீட்டாளர் மீதும் ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளவும் மனுதாரரிடம் மறுமின் இணைப்புக்காக பெறப்பட்ட தொகை 2 வது முறையா க மின்துண்டிப்பு செய்வதற்காக வசூல் செய்யப்பட்ட தொகை மற்றும் தவறாக கணக்கீடு செய்யப்பட்ட மின்கட்டணத் தொகை ஆகியவற்றை மனுதாரருக்கு திரும்ப அளிக்கவும் அல்லது மீண்டும் மறுமின் இணைப்பு பெற்ற பிறகு வரும் மின் கட்டணத்தில் ஈடுசெய்ய எதிர்மனுதாரருக்கு உத்தரவிட்டு இம்மனு இத்துடன் முடித்து வைக்கப்படுகிறது."*

**4.0 <u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை</u>**

4.1 மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் தங்களது தரப்பு வாதங்களை எடுத்துரைப்பதற்கு வசதியாக 12.10.2023 அன்று காணொலி மூலம் கேட்புரை நடத்தப்பட்டது.

4.2 மேல்முறையீட்டாளர் சார்பாக திரு C.ஜெயபால் அவர்கள் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தன்னுடைய வாதத்தை எடுத்துரைத்தார்.

4.3 எதிர்மனுதாரர்கள் திரு R. பாட்ஷா முகமது , செயற்பொறியாளர்/ இ&ப/ வாணியம்பாடி, திரு A. இக்பால் அஹமது, உதவி செயற்பொறியாளர்/ இ&ப / பகிர்மானம்/ வாணியம்பாடி மற்றும் திரு K. ரமேஷ், உதவி மின்பொறியாளர்/ இ&ப / நகரம்/வாணியம்பாடி, திருபத்தூர் மின் பகிர்மான வட்டம் ஆகியோர் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தங்களுடைய வாதத்தை எடுத்துரைத்தனர்.

4.4 மின்குறைதீர்ப்பாளரின் முன்பு சமர்ப்பிக்கப்படும் மனு மேல்முறையீட்டு மனு என்பதால் மின்குறைதீர்மன்றத்தில் மனுதாரரால் வைக்கப்பட்ட கோரிக்கைகள் சம்பந்தப்பட்ட வாதங்கள் மட்டுமே தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது . குறைதீர் மன்றத்தின் நடவடிக்கைகள் , குறைதீர் மன்றத் தில் சமர்ப்பிக்கப்படாத புதிய நிவாரணங்கள் அல்லது பணியாளர் ஒழுங்கு நடவடிக்கை சம் பந்தப்பட்ட கோரிக்கைகள்

முதலியன மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளின்படி மின்குறைதீர்ப்பாளரின் தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

## 5.0 மேல்முறையீட்டாளரின் வாதங்கள்:

5.1 மேல்முறையீட்டாளர் தான் வாணியம்பாடி நகரம் ஆம்பூர் பேட்டை திருவள்ளுவர் தெருவில் கடை மின் இணைப்பு எண் 08-421-008-182 தற்காலிக மின் துண்டிப்பு நகர் பிரிவு வாணியம்பாடி கோட்டத்தில் அலுவலக பாதுகாப்பில் கொடுத்திருந்தேன் நான் கடை கட்டிடம் மற்றும் வீடு கட்டி முடித்தப்பிறகு என்னுடைய மின் இணைப்பை மறு இணைப்பு வழங்க விண்ணப்பம் கொடுத்தால் , 4/2/2019 க்கு முன் மின் இணைப்பு என கேட்டால் மின் இணைப்பு வழங்காமல் தடையில்லா சான்று இளநிலை மின் பொறியாளர் கேட்பதாகவும், ஆனால் 2019 கக்கு முன் உள்ள மின் இணைப்பை புதிய கட்டிடத்திற்கு கொடுக்க கூடாது மறு இணைப்பு வழங்கக் கூடாது என 4/2/2019 க்கு முன் ரூலில் இல்லை, எனவே தனக்கு மறு இணைப்பு தான் கோருவதாகவும், புதிய மின் இணைப்பு கேட்கவில்லை எனவே தனக்கு மறு இணைப்பு வழங்க ஆவண செய்யுமாறு மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.2 மேல்முறையீட்டாளர் மின்குறைதீர் மன்றத்தின் தீர்பாணையின் படி மனுதாரர் மின் இணைப்பு எண் .08-421-006-182 ஐ மறு மின் இணைப்பு பெற கட்டிட முடிவு சான்று அளிக்கும் பட்சத்தில் வாரிய விதிமுறைகளின்படி நடவடிக்கை எடுத்திடவும் கட்டிட முடிவு சான்று பெறாமலேயே மறு மின் இணைப்பு கணினியில் பதிவு செய்த வணிக ஆய்வாளர் மீதும் மின் அளவி இல்லாமலேயே மின்கணக்கீடு செய்த கணக்கீட்டாளர் மீதும் ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளவும் மனுதாரரிடம் மறு மின் இணைப்புக்காக பெறப்பட்ட தொகை மற்றும் தவறாக கணக்கீடு செய்யப்பட்ட மின் கட்டணத்தைத் தொகை ஆகியவற்றை மனுதாரருக்கு திரும்ப அளிக்கவும் அல்லது மீண்டும் மறு மின் இணைப்பு பெற்ற பிறகு வரும் மின் கட்டணத்தில் ஈடு செய்ய எதிர்மனுதாரருக்கு உத்தரவிட்டு இம்மனு இத்துடன் முடித்துவைக்கப்பட்டதாக முறையிட்டுள்ளார்.

5.3 தீர்பாணையில் கூறி உள்ளபடி மறு மின் இணைப்பு பெற கட்டிட முடிவு சான்று அளிக்கும் பட்சத்தில் வாரிய விதி முறைகளின்படி நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும், மேலும் தமிழ்நாடு ஒருங்கிணைந்த மேம்பாடு கட்டிட

விதிகள் 2019–ன் விதி 20 ன் படி 2019க்கு பிறகு கட்டப்பட்ட கட்டிடங்களுக்கு கட்டிட முடிவுச்சான்று விலக்களிக்கப்பட்டுள்ளதாக மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தில் கூறப்பட்டதாகவும், ஆனால் மேற்கண்ட விதியானது வீதப்பட்டி மாற்றத்திற்கு மட்டுமே தவிர, மீட்டர் போர்டு மாற்றம் தற்காலி மின் துண்டிப்பு, மறு இணைப்பு ஆகியவற்றிற்கு பொருந்தாது எனவும் , ஆனால் இந்த தீர்பாணையில் கட்டிட முடிவு சான்று பெற்றால் மட்டுமே தற்காலிக மின் துண்டிப்பை மறு இணைப்பு வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.4 மேலும் 24.06.2022 அன்று மின் இணைப்பு எண் .08–421–006–182–ஐ தற்காலிக மின் துண்டிப்பில் இருந்து மறு மின் இணைப்பு வழங்க விண்ணப்பம் இளநிலை மின் பொறியாளர் , நகர்பிரிவு வாணியம்பாடி அவர்களிடம் கொடுத் ததாகவும் பின்னர் அவருடைய மின் இணைப்பை எந்த ஒரு முன் அறிவிப்பு இல்லாமல் (Account close) நிரந்தரமாக கணக்கு முமுடிக்கப்பட்டுவிட்டது என்பதை தெரிவித்து பின்னர் இளநிலை மின் பொறியாளர் நகர்பிரிவு, வாணியம்பாடி அவர்களே வாணியம்பாடி வருவாய் பிரிவு அலுவலகத்தில் கூறி ம றுபடியும் Account close ஐ ரத்து செய்த இளநிலை பொறியாளரே கணிணியில் RC செய்து அதற்குண்டான கட்டணத்தை கட்ட கூறியதாகவும், அதற்குண்டான கட்டணத்தை கட்டி முடித்தவுடன் மின் இணைப்பு எண்.08–421–006–182 க்கு உண்டான மீட்டரை வைத்து RC செய்து தரும்படி கோரியதாகவும், ஆனால் மின் மீட்டர் அலுவலகத்தில் தேடியும் கிடைக்கவில்லை எனவும், அதன் பின்னர் 4 மாத காலமாக இளநிலை மின் பொறியாளர் நகர்பிரிவு , வாணியம்பாடி அவர்களை நேரில் சந்தித்து பலமுறை கேட் டதற்கு இளநிலை மின் பொறியாளர் த ன்னுடைய மின் இணைப்பின் மின் மீட்டர் இல்லை என கூறி அதைதேடிக் கொண்டிருக்கிறோம் கிடைத்தவுடன் மீட்டர் வைத்து RC செய்து கொடுக்கிறேன் என கூறி யதாகவும், இதற்கிடையில் இளநிலை பொறியாள ரிடம் மின் கட்டணம் வந்துள்ளது என தெரிவித்த போது அதற்கு தங்களுடைய மின் இணைப்பு RC செய்த காரணத்தால் கணக்கீட செய்யாமல் மின் இணைப்பில் வருகிறது என் று கூறி மீட்டர் வைக்கும் வரை மின் கட்டணத்தை கட்டும்படி கூறியதாகவும், அதன் காரணமாக இரண்டு மாதமாக மின் கட்டணம் செலுத்தி யதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.5 ஆனால் மீட்டர் கிடைக்காததால் தற்காலிக மின் துண்டிப்புக்கு கடிதம் கொடுத்து பணம் செலுத்த கூறியதாகவும், அதற்குண்டான கட்டணத்தையும் செலுத்திவிட்டதாகவும், பின்னர் இளநிலை பொறியாளர் அவர்கள் மீட்டர் கிடைத்துவிட்டது என்று கூறி RC க்கு உண்டான கட்டணத்தை கட்டி பெற்றுக்கொள்ளும் படியும் மேலும் RC பெறும்போது கட்டிடம் கட்டி முடிவு சான்று வேண்டும் என்று ஒரு வருடம் கழித்துதான் கூறியதாகவும், இதன் காரணமாக நுகர்வோர் குறைதீர்வு மன்றத்தை அனுகியதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.6 வணிக ஆய்வாளர் கட்டிட முடிவு சான்று பெறாமலேயே மறு மின் இணைப்பு கணினியில் பதிவு செய்த வணிக ஆய்வாளர் மற்றும் மின் அளவி இல்லாமலேயே மின் கணக்கீடு செய்த கணக்கீட்டாளர் மீது ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளவும் மனுதாரரிடம் மறு மின் இணைப்புக்கு பெறப்பட்ட தொகை இரண்டாவது முறையாக மின் துண்டிப்பு செய்தமைக்காக வசூல் செய்யப்பட்ட தொகை மற்றும் தவறாக கணக்கீடு செய்யப்பட்ட மின் தொகை ஆகியவற்றை ம னுதாரருக்கு திருப்பி அளிக்கவும் அல்லது மீண்டும் புதிய மின் இணைப்பு பெற்ற பிறகு வரும் மின் கட்டணத்தில் ஈடு செய்யும்படி தீர்பாணையில் கூறப்பட்டுள்ளதாகவும், ஆனால் கணினியில் தற்காலிக மின் துண்டிப்பை RC செய்ய வணிக ஆய்வாளருக்கோ , கணக்கீட்டாளருக்கோ கணி னியில் பதியே ற்றம் செய்ய இயலாது எனவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.7 RC செய்யும்பொழுது என் மின் இணைப்பு Account close செய்யப்பட்டிருந்ததை இளநிலை பொறியாளர் தான் வருவாய் அலுவலகர் வாணியம்பாடி அவர்களிடம் கூறி Roll back செய்து கணினியில் பதிவு செய்து மின் கட்டணத் தை வசூல் செய்தார் கணினியில் பதிவேற்றம் செய்ய இளநிலை பொறியாளர் அவர்களுக்கு மட்டும் தான் அனுமதி உள்ளதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.8 மேலும் கணக்கீட்டாளர் மாதாந்திர கணக்கீடு மடிக்கும் போது தன்னுடைய மின் இணைப்பு கணக்கீடு செய்யப்படாமல் இருந்த காரணத் தால் கணக்கீட்டாளரை மின் கட்டணத்தை ஏற்றும் படியும் மேலும் மின் மீட்டரை வைக்காமலேயே மின் கட்டணம் வந்துள்ளதை தெரிவித்த காரணத்தினால் மின் மீட்டர் கிடைக்கும் வரை மினிமம் சார்ஜ் கட்ட இளநிலை பொறியாளர் கூறி யதாகவும், இது அனைத்திற்கும் இளநிலை மின் பொறியாளர் நகர்பிரிவு வாணியம்பாடி அவர்களே காரணம் எனவும், இதன் காரணமாக மன

இளைச்சல் மற்றும் தன்னுடைய பண இழப்பு அனைத்திற்கும் சேர்த்து ரூபாய் சுமார் 50,000/- க்கு இழப்பீடாக வழங் குமாறும், தன்னுடைய மின் இணைப்பு எண் 08-421-006-182 தற்காலிக மின் துண்டிப்பில் இருந்து மறு மின் இணைப் பு கட்டிட முடிவு சான்று இல்லாமல் வழங்குமாறு மேல்முறையீட்டாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.

## 6.0 <u>எதிர்மனுதாரரின் வாதங்கள்:</u>

6.1 மனுதாரர் தனது மேல்முறையீட்டு மனுவில் "மின் நுகர்வோர் குறை தீர்க்கும் மன்றம் திருப்பத்துர் மின்பகிர்மான வட்டம், பாலம்மாள் காலணி, திருப்பத்தூர் அவர்களின் தீர்பாணையின் படி மனுதாரர் மின் இணைப்பு எண் .08-421-006-182 ஐ மறு மின் இணைப்பு பெற கட்டிட முடிவு சான்று அளிக்கும் பட்சத்தில் வாரிய விதிமுறைகளின்படி நடவடிக்கை எடுத்திடவும் கட்டிட முடிவு சான்று பெறாமலேயே மறு மின் இணைப்பு கணினியில் பதிவு செய்த வணிக ஆய்வாளர் மீதும் மின் அளவி இல்லாமலேயே மின் கணக்கீடு செய்த கணக்கீட்டாளர் மீதும் ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளவும் மனுதாரரிடம் மறு மின் இணைப்புக்காக பெறப்பட்ட தொகை மற்றும் தவறாக கணக்கீடு செய்யப்பட்ட மின் கட்டணத்தொகை ஆகியவற்றை மனுதாரருக்கு திரும்ப அளிக்கவும் அல்லது மீண்டும் மறு மின் இணைப்பு பெற்ற பிறகு வரும் மின் கட்டணத்தில் ஈடு செய்ய எதிர்மனுதாரருக்கு உத்தரவிட்டு இம்மனு முடி த்துவைக்கப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.2 மேற்கண்ட தீர்பாணையில் கூறி உள்ளபடி மறு மின்இணைப்பு பெற கட்டிட முடிவு சான்று அளிக்கும் பட்சத்தில் வாரிய விதி முறைகளின் படி நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும், மேலும், தமிழ்நாடு ஒருங்கிணைந்த மேம்பாடு கட்டிட விதிகள் 2019-ன் விதி எண்:20-ன் படி 2019க்கு பிறகு கட்டப்பட்ட கட்டிடக்களுக்கு கட்டிட முடிவுச்சான்று விலக்களிக்கப்பட்டுள்ளது என மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தல் கூறப்பட்டதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.3 ஆனால், மேற்கண்ட விதியானது வீதப்பட்டி மாற்றத்திற்கு மட்டுமே தமிர, மீட்டர் போர்டு மாற்றம், தற்காலிக மின் துண்டிப்பு, மறு இணைப்பு ஆகியவற்றிற்கு பொருத்தாது எனவும், ஆனால் இந்த தீர்ப்பாணையில் கட்டிட முடிவுச்சான்று பெற்றால் மட்டுமே தற்காலிக மின் துண்டிப்பை மறு இணைப்பு வழங்கப்படும் எனவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.4 வணிக ஆய்வாளர் கட்டிட முடிவு சான்று பெறாமலேயே மறு மின் இணைப்பு கணினியில் பதிவு செய்த அணிக ஆய்வாளர் மற்றும் மின்னளவி இல்லாமலேயே மின் கணக்கீடு செய்த கணக்கீட்டாளர் மீது ஒழுக்கு நடவடிக்கை மேற்கொள்ளவும் மனுதாரரிடம் மறு மின்இணைப்புக்கு பெறப்பட்ட தொகை இரண்டாவது முறையாக மின்துண்டிப்பு செய்தமைக்காக வசூல் செய்யப்பட்ட தொகை மற்றும் தவறாக கணக்கீடு செய்பட்பட்ட மின் தொகை ஆகியவற்றை மனுதாரருக்கு திருப்பி அளிக்கவும் அல்லது மீண்டும் புதிய மின் இணைப்பு பெற்ற பிறகு வரும் மின்கட்டணத்தில் ஈடு செய்யும் படி மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்ற தீர்ப்பாணையில் கூறப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். மேலும், கணினியில் தற்காலிக மின்துண்டிப்பை RC செய்ய வணிக ஆய்வாளருக்கோ, கணக்கீட்டாளருக்கோ கணினியில் பதிவேற்றம் செய்ய உரிமை இல்லை என்று எதிர்மனுதாரர் தெரிவித்தார்.

6.5 தமிழ்நாடு ஒருங்கிணைந்த மேம்பாடு மற்றும் கட்டிட விதிகள் 2019 ன் விதி எண் 20ன் படி 2019க்கு பிறகு கட்டப்பட்ட கட்டிடங்களுக்கு விளக்களிக்கப்பட்டவை தவிர்த்து மற்ற கட்டிடங்களுக்கு மின் இ ணைப்பு பெற கட்டிட முடிவு சான்று அவசியமாகிறது என்று தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும், அதாவது, 2019க்கு பிறகு கட்டப்பட்ட 12 மீட்டர் உயரத்திற்கு உட்பட்டு மூன்று வாசஸ்தலத்திற்கு (3 dwelling) மிகாத குடியிருப்பு கட்டிடம் அல்லது 750 சதுர மீட்டர் பரப்பளவு கட்டிடம் மற்றும் அனைத்து வகையான தொழிற்சாலை கட்டிடங்களுக்கு (Completion Certificate) மின்னிணைப்பு பெற தேவையில்லை, இதை தவிர மற்ற வகை கட்டிடங்களுக்கு மின்இணைப்பு பெற Completion Certificate அவசியமானதாகும் என எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.6 திருமதி.J.மணிமாலா க/பெ.ஜெயபால், 859, திருவள்ளுவர் தெரு, அம்பூர்பேட்டை, வாணியம்பாடி என்ற முகவரி குறிப்பிட்டு தனக்கு மேற்குறிப்பிட்டுள்ள விலாசத்தில் மின்னிணைப்பு எண் 08-421-006-182 கடை மின்னிணைப்பு உள்ளதாகவும், மேலும், தான் கடையை இடிப்பதால், அதில் உள்ள மீட்டரை தற்காலிக மின் துண்டிப்பு மூன்று மாதத்திற்கு தற்காலிகமாக மின்துண்டிப்பு செய்து தருமாறும், அதற்குண்டான கட்டணத்தையும் கட்ட சம்மதிக்கின்றேன் என்று குறிப்பிட்டு 21.04.2021 அன்று விண்ணப்பம் அளித்ததாகவும், இதனடிப்படையில் பதிவு கட்டணம் ரூபாய் 118/-ம் மற்றும்

தற்காலிக மின்துண்டிப்புக்கான இதர கட்டணம் ரூபாய். 1679/- அன்றைய தினமே வசூலிக்கப்பட்டு தற்காலிக மின்துண்டிப்பு செய்யப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.7 திருமதி.J.மணிமாலா க/பெ.ஜெயபால், 859, திருவள்ளுவர் தெரு, அம்பூர்பேட்டை, வாணியம்பாடி அவர்கள் மேற்கண்ட மின்இணைப்பு எண் 08-421-006/182/ V உடன் 1). 08-421-006-110/V, 20 08-421-006-266/V, இரண்டு கடை மின்இணைப்பு வீட்டு மின்இணைப்புகள் மூன்று (1), 08-421-006 -643, 2)- 08-421-006-644 மற்றும் 3).08 421-006-143 என ஐந்து மின்இணைப்புகளுக்கும் 21.04.2021 தற்காலிக மின்துண்டிப்பு வேண்டி விண்ணப்பங்களை அளித்துள்ளதாகவும், எனவே ஆறு மின் இணைப்புகளுக்கும் உரிய கட்டணம் வசூலிக்கப்பட்டு தற்காலிக துண்டிப்பு செய்யப்பட்டதாகவும், 08-421-006-299 என்ற வீட்டு மின்இணைப்பு தற்காலிக (Temporarry) மின்இணைப்பாக கட்டண விகித மாற்றம் செய்யப்பட்டு கட்டுமான பணிக்காக தக்கவைத்துக்கொண்டதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.8 இந்நிலையில் மேற்படி மேல்முறையீட்டாளர் தற்காலிக மின்துண்டிப்பு செய்யப்பட்டிருந்த வணிக மின் இணைப்பை மறு மின்இணைப்பு கோரி மூன்று மாதம் கடந்த பின்பும் விண்ணப்பம் அளிக்காத நிலையில் ஓர் ஆண்டு கடந்து விட்டதால் கணினியில் மின்இனைப்பு எண் 08-421-006-182 உட்பட மேற்கண்ட ஐந்து மின்இணைப்புகளுக்கும் (Account close) கணக்கு முடிக்கப்பட்டுவிட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.9 மின்இணைப்பு எண் 08-421-006-644, 08-421-006-266/V. 08-421-006-643. 08-421- 006-182 (திருமதி.J.மணிமாலா பெயரில் உள்ளது) 08-421-006-143, 08-421-006-110 (திரு.C.ஜெயபால் பெயரில் உள்ளது) ஆகிய மின்இணைப்புகளுக்கு 12-07-2022 அன்று மறு மின்இணைப்பு வேண்டி விண்ணப்பம் நேரிடையாக விண்ணப்பதாரர் இந்த விண்ணப்பங்களை கேத்தாண்டபட்டி பிரிவையும் கூடுதலாக பார்த்து வந்த இளநிலை பொறியாளர் / இ&ப/ நகரம்/ வாணியம்பாடி அவர்கள் கையொப்பம் இட்டு விண்ணப்பங்களை திரு பெருமாள் வணிக ஆய்வாளர் அவர்களிடம் அளித்து களஆய்வு செய்திட பணித்துள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.10 திரு பெருமாள் வணிக ஆய்வாளர் அவர்கள் மேற்கண்ட மின்இணைப்புகளுக்கான இடத்தில் கட்டிடம் முழுமையாக கட்டி முடிக்கப்படாமல் கட்டுமான பணி தொடர்ந்து நடைபெற்று வருவதை பிரிவு அலுவலருக்கு தெரிவிக்காமல் மறைத்துவிட்டு கணக்கு முடிக்கப்பட்ட மேற்கண்ட மின்இணைப்புகளை மறுபடியும் மறுமின்இணைப்பு வழங்கவேண்டி வருவாய் பிரிவிற்கு பிரிவு அலுவலர் மூலமாக கடிதம் அனுப்பி உள்ளதாகவும், வருவாய் பிரிவில் மேற்கண்ட மின்இணைப்புகளுக்கு மறு மின்இணைப்பு வழங்க வேண்டி கணினியில் Revoke செய்து கணக்கு முடிப்பில் இருந்த மேற்கண்ட மின்இணைப்புகளுக்கு மீண்டும் மறு மின்இணைப்பு வழங்க வேண்டி மறு மின்இணைப்பு கட்டணம் 08-421-006-182 மின்இணைப்புக்கு ரூபாய் 3,236/- மற்றும் மற்ற மின்இணைப்புகளுக்கு ரூபாய் 6,020/- கட்டணம் பிரிவு அலுவலருக்கு தெரியாமல் வசூல் செய்து கணினியில் வணிக ஆய்வாளர் அவர்கள் 08-421-006- 182 மற்றும் மற்ற 5 மின்இணைப்புகளுக்கும் (RC) வழங்கியுள்ளதாகவும், மறு மின்இணைப்பு அனுமதி வழங்கவேண்டி தற்காலிக மின்துண்டிப்பு மற்றும் மறுமின்இணைப்பு பதிவேட்டில் மின்இணைப்புகளுக்கான முகவரி மற்றும் மின்கட்டணம் வசூலிக்கப்பட்ட விவரம் பதிவு செய்தவர் இளநிலைபொறியாளர்/நகரம்/வாணியம்பாடி அவர்களிடம் பதிவேட்டினை காண்பிக்காமல் ஒப்புதல் பெ றாமல் இருந்து வந்துள்ளதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.11 அதாவது கணக்கு முடிப்பில் இருந்த மேற்கண்ட மின்இணைப்புகளுக்கு மீண்டும் மின்இணைப்பு கணினியில் பதிவேற்றம் செய்ய, பதிவேட்டில் பதிவு செய்தவர் பிரிவு அலுவலரிடம் முறையான ஒப்புதல் ஏதும் திரு பெருமாள், வணிக ஆய்வாளர் அவர்கள் பெறாமல் இளநிலைபொறியாளர்/நகரம்/வாணியம்பாடி அவர்களின் கடவுச்சொல்லை தவறாக பயன்படுத்தி மேற்கண்ட மின்இணைப்புகளுக்கு மறு இணைப்பு கணினியில் வழங்கியுள்ளதாகவும், ஆனால், மேற்கண்ட ஆறு மின்இணைப்புகளுக்கான மின் மீட்டரை களத்தில் கட்டிடம் கட்டப்பட்டு வரும் நிலையில் மின் மீட்டரை களத்தில் கட்டிடம் பொருத்திட வழி இல்லாததால் இளநிலைபொறியாளர்/ நகரம்/ வாணியம்பாடி அவர்களுக்கு தெரியாமலேயே அலுவலகத்தில் இருப்பில் வைத்துள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.12 இந்நிலையில் பயன்பாடு இல்லாத மின்இணைப்புகளை பிரிவு அலுவலரால் ஆய்வு செய்யும் போது மேற்கண்ட மின்இணைப்புகள் உள்ள இடத்தில் கட்டுமான பணி நடைபெற்றுக் கொண்டிருப்பதும், மேற்கண்ட மின்இணைப்புகலுக்கான மின்மீட்டர்கள் இல்லாததும் கண்டறியப்பட்ட நிலையில் கணினியில் மேற்கண்ட மின்இணைப்புகளுக்கு இரண்டு கணக்கீடு கணக்கீட்டின் போது Nil Consumption மீட்டரே பொருத்தப்படாத நிலையில் கணக்கீட்டாளரால் மின்கணக்கீடு பதிவு செய்துள்ளார். இதற்கான மின்கட்ணத்தையும் மின்நுகர்வோர் கட்டியுள்ளார். மின்இணைப்பு எண் 08-421-006-182 ற்கு 10/2022 மாதத்தில் ரூபாய். 200/- ம் 12/2022- இல் ரூபாய். 400/-ம் செலுத்தியுள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.13 இந்நிலையில் இளநிலைபொறியாளர்/ நகரம்/ வாணியம்பாடி அவர்கள் Nil consumption மின்இணைப்புகளை பட்டியல் எடுத்துக்கொண்டு களத்தில் மின்இணைப்பை 30-01-2023 அன்றைய தினம் ஆய்வு செய்துள்ளார். ஆய்வின் போது மேற்கண்ட மின்இணைப்புகளின் கட்டிடம் முழுமையாக கட்டி முடிக்கப்படாமல் சுமார் 80% கட்டிமுடிக்கப்பட்ட நிலையில் கட்டுமான பணி நடைபெற்று வந்ததை கண்டறிந்துள்ளதாகவும், அன்றைய தினத்தில் புகைப்படம் எடுக்கப்பட்டு மேலும், மேற்கண்ட மின்இணைப்புகளின் மின் மீட்டர்கள் களத்தில் இல்லாமல் இருப்பதும் கண்டறிந்துள்ளதாகவும், உடன் மேல்முறையீட்டாளரிடம் கட்டிடம் முழுமையாக கட்டி முடிக்காமலேயே தற்காலிக மின்துண்டிப்பு செய்யப்பட்ட மின்இணைப்புக்கு மறுமின்இணைப்பு வேண்டி விண்ணப்பம் அளித்தீர்கள், மேலும் கணக்கீடு செய்யப்படாமலேயே மின்மீட்டர் இல்லாத நிலையில் தவறாக போடப்பட்ட கணக்கீடுகனளுக்கு மின்கட்டணம் செலுத்தியுள்ளீர்கள். இவ்வாறு ஏன் செய்தீர்கள் என கேட்டதற்கு மேல்முறையீட்டாளர் கட்டிடம் கட்டி முடிப்பதற்கு இரண்டு வருடத்திற்கு மேல் ஆகும் என்ற நிலையில் இரண்டு வருடத்திற்கு மேலாக சென்றுவிட்டால் மீண்டும் இந்த மின்இணைப்புகளை திரும்ப பெற இயலாது என்ற நிலையிலும் இரண்டு வருடத்திற்கு முன்பாக 08-421-006-182 கடை மின்இணைப்பை (RC) பெற்று விட்டால் கட்டிடம் முடிக்கப்பட்ட பிறகு மின்இணைப்பை தக்கவைத்துக்கொள்ளலாம் என்று செயல்பட்டதாகவும் தெரிவித்தார். மேலும், மேல்முறையீட்டாளர் மின்மீட்டர் இல்லாமல் மின்கட்டணம் வந்துள்ளதை உடனே பிரிவு அலுவலரிடம் தெரிவித்திருந்தால்

மின்கட்டணத்தை செலுத்தாமல் தவிர்த்திருக்கலாம் என எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.14 ஆனால், அவ்வாறு செய்யாமல் யாரும் ஆய்வு செய்யாத நிலையில் அப்படியே கட்டி முடிக்கும் வரை மின்கட்டணம் செலுத்திவிட்டு அப்படியே மின்மீட்டனர தக்கவைத்துக்கொள்ளலாம் என்று எண்ணி செயல்பட்டுள்ளார். ஏனென்றால், மின்நுகர்வோர் இளநிலைபொறியாளர்/ வாணியம்பாடி மின்இணைப்பு எண் 08–421–006–182 ஆய்வு செய்யும் நாள் வரை மின்மீட்டர் இல்லாமல் மின்கட்டணம் மேற்குறிப்பிடப்பட்டுள்ள ஆறு மின்இணைப்புகளுக்கும் மின் கட்டணம் வந்துள்ளது என்பதை பிரிவு அலுவலருக்கு தெரிவிக்காமல் இருந்து வந்துள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.15 எனவே இளநிலை பொறியாளர் /நகரம் / வாணியப்பாடி அவர்கள் மேல்முறையீட்டாளர் கட்டிட கட்டி முடிக்காமல் நகர்பிரிவின் திரு .பெருமாள், வணிக ஆய்வாளர் மற்றும் செல்வி குப்பம்மாள் , கணக்கீட்டாளர் ஆகியோர் வாரியத்தை ஏமாற்றி இவ்வாறு செயல்பட்டது ஏற்றுகொள்ள இயலாது என்று கூறி மறுபடியும் நீங்கள் மேற்கண்ட அனைத்து மின்இணைப்புகளுக்கும் தற்காலிக மின்துண்டிப்புக்கான விண்ணப்பம் அளித்து தற்காலிக மின்துண்டிப்பு செய்து கொள்ளுங்கள் என்று அறிவுறுத்தி தற்காலிக மின்துண்டிப்புக்கான விண்ணப்பத்தை மேற்கண்ட மின்இணைப்புகளுக்கு 01.02.2023 அன்று பெறப்பட்டு மதுபடியும் தற்காலிக மின்துண்டிப்புக்கான கட்டணம் பெறப்பட்டு 02.02.2023 அன்று 08–421–006–182 உடன் மற்ற மூன்று (08–421–006–110, 08–421–006–643, 08–421–006–644) மின்இணைப்புகலுக்கும் தற்காலிக மின்துண்டிப்பு செய்யப்பட்டது. மின்இணைப்பு எண் 08–421–006–143, 08–421–006–266 ஆகிய மின்இணைப்பு வேண்டாம் என்று நிரந்தர மின்துண்டிப்புக்கு விண்ணப்பம் அளித்ததின் அடிப்படையில் நிரந்தர மின்துண்டிப்பு செய்யப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.16 இந்நிலையில், 05/2023 மாதத்தின் முதல் வாரத்தில் திருமதி.J.மணிமாலா க/பெ.C.ஜெயபால், 859, திருவள்ளுவர் தெரு, அம்பூர்பேட்டை, வாணியம்பாடி அவர்களின் கட்டிடம் முழுமையாக கட்டி முடிக்கப்பட்டுள்ளதாகவும், ஆதலால், தற்காலிக மின்துண்டிப்பு செய்யப்பட்ட 06–421–006–182 கடை மின்கிணைப்பை மறு

மின்இணைப்பு வழக்க வேண்டும் வாய்மொழியாக கேட்டுக் கொண்டதாகவும் , அதற்கு அவரிடம் ஏற்கனவே பெற்றிருந்த கடை மின்இணைப்புள்ள கட்டிடம் முழுமையாக இடிக்கப்பட்டு புதியதாக கட்டப்பட்டதால், தமிழ்தாடு ஒருங்கிணைந்த மேம்பாடு கட்டிட 2019–ன் விதி எண்:20–ன் படி 2019க்கு பிறகு கட்டப்பட்ட கட்டிடங்களுக்கு விலக்கு அளிக்கப்பட்ட கட்டிடங்களை தவிர மற்ற வணிக பயன்பாட்டு கட்டிடங்களுக்கு மின்கிணைப்பு வழங்க கட்டிட முடிப்பு சான்று உரிய நகராட்சி அலுவலகத்தில் பெற்று, அவ்வாறு பெறப்பட்ட சான்றுடன் மறுமின்இணைப்பு கோரும் விண்ணப்பம் அளிக்கும் பட்சத்தில் மேற்கண்ட 08–421–006–182 கடை மின் இணைப்பை மறு மின்கிணைப்பு வழக்கப்படும் என தெரிவிக்கப்பட்டதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.17 பின்னர் 09.05.2023 அன்று வாணியம்பாடி கோட்ட மின்நுகர்வோர் குறைத்தீர்க்கும் நாளில் கட்டிட முடிப்பு சான்றிதழ் இல்லாமல் வழங்க வேண்டி மனுதாரர் சார்பாக அவரின் கணவர் திரு.C.ஜெயபால் அவர்கள் மேற்பார்வைபொறியாளர்/ திருப்பத்தூர் அவர்களிடம் இத்துடன் மின்நுகர்வோர் குறைத்தீர்க்கும் மன்றம், திருப்பத்தூர் மின்பகிர்மான திருப்பத்தூருக்கு 11–05–2023 அன்று அளித்த மனுவின் படி, 15.06.2023 அன்று தீர்ப்பாணையில் மனுதாரர் மின்இணைப்பு எண் 421–006–182 மறு மின்இணைப்பு பெற கட்டிட முடிப்பு சான்று அளிக்கும் பட்சத்தில் வாரிய விதிகளின் படி நடவடிக்கை எடுத்திட தீர்பாணை வழங்கப்பட்டுள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.18 எனவே, தமிழ்நாடு ஒருங்கிணைந்த மேம்பாடு மற்றும் கட்டிட விதிகள் 2019 விதி எண் 20 படி 2019க்கு பிறகு கட்டப்பட்ட கட்டிடங்களுக்கு விலக்களிக்கப்படவைக்கு தவிர்த்து கட்டிடங்களுக்கு மின்.இணைப்பு பெற கட்டிட முடிப்பு சான்று அவசியமாகிறது எனவும், மேல்முறையீட்டாளர் தனது கட்டிடத்தை முழுமையாக இடித்து புதியதாக கட்டிடம் கட்டியும் மேற்காணும் விதிகளின் படி மறு மின்இணைப்பு பெற கட்டிட முடிவுச்சான்று அவசியமாகிறது எனவும், மேல்முறையீட்டாளர் மின்இணைப்பு எண் 421–006–182 ஐ மறுமின்இணைப்பு பெற கட்டிய சான்று அளிக்கும்பட்சத்தில் வாரிய விதிகளின் படி மறு மின்இணைப்பு (வணிக பயன்பாடு) வழக்கப்படும் என எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.0 **<u>மின் குறைதீர்ப்பாளரின் தீர்வு</u>**

7.1 இருதரப்பு வாதங்கள் மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் ஆகியவற்றை ஆராய்ந்து பார்க்கும் போது கீழ்க்கண்டவைகள் வழக்கெழு வினாக்களாக தெரிகின்றன

i) இவ்வழக்கில் மேல்முறையீட்டாளர் கோரும் வர்த்தக மின் இணைப்பு வழங்குவது சாத்தியமா?

ii) மேல்முறையீட்டாளர் தனக்கு ஏற்பட்ட காலவிரயத்துக்கு நிவாரணம் கோருவது ஏற்படையது தானா?

8.0 **<u>கேள்வி 1–ற்கான தீர்வு</u>**:

8.1 மேல்முறையீட்டாளர் திருமதி J. மணிமாலா, க/பெ. C.ஜெயபால், 859, திருவள்ளுவர் தெரு , அம்பூர்பேட்டை, வாணியம்பாடி, திருப்பத்தூர் மாவட்டம் என்ற விலாசத்தில் கொடுக்கப்பட்ட கடை மின் இணைப்பு எண் 421–008–182–ஐ கடந்த 2021–இல் கடையை புதிதாக கட்ட வேண்டி தற்காலிக மின் துண்டிப்பு செய்யப்பட்டு மீண்டும் மறு இணைப்பு வழங்கக் கோரி 24.06.2022–இல் விண்ணப்பித்துள்ளார்.

8.2 எதிர்மனுதாரர் மேற்கூறிய இடத்தை கள ஆய்வு செய் ததில் பழைய கட்டிடம் முழுவதுமாக இடிக்கப்பட்டு புதிய கட்டிடம் தரைதளம் மற்றும் இரண்டு அடுக்கு மாடி வீடாக கட்டப்பட்டு இருந்ததாகவும், மேல்முறையீட்டாளரின் கோரிக்கையின்படி வர்த்தக மின் இணைப்பு எண் 08–421–006–182–ஐ மறு மின் இணைப்பு பெற கட்டிடம் முடிவு சான்று அளிக்கும் பட்சத்தில் வாரிய விதிமுறைகளின் படி நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்துள்ளார்.

8.3 மேல்முறையீட்டாளர் தன்னுடைய கடை மின் இணைப்பு எண் 421–008–182–ஐ கடந்த 2021–இல் கடையை புதிதாக கட்ட வேண்டி தற்காலிக மின் துண்டிப்பு செய்யப்பட்டு மீண்டும் மறு இணைப்பு வழங்கக் கோரி 24.06.2022–இல் விண்ணப்பித்துள்ளார். இது சம்பந்தமாக தமிழ்நாடு மின் வழங்கல் விதித் 6(2)–ஐ ஆராய விரும்புகின்றேன். அந்த விதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"(6) Service line, Structures and equipments shifting charge:–*

*xxx*

*xxx*

*(2) Temporary dismantling and re-erection of shifting or a service connection within the same premises necessitated due to remodeling of premises will be carried out on payment of the required charges for the same."*

8.4 மேற்கூறிய விதியை பார்க்கும்பொழுது , கட்டிடத்தைச் சீர்திருத்துவதன் காரணமாக, ஒரு கட்டிடத்தில் உள்ள மின் இணைப்பை தற்காலிக மின் துண்டிப்பு செய்து ஒரே இடத்தில் நிறுவியதை தற்காலிகமாக பிரித்து மீள நிறுவுதல் அல்லது மின்னிணைப்பை இடமாற்றம் செய்தல், அதற்கான உரிய கட்டணத்தைச் செலுத்தியதும், நிறைவேற்றப்படும் என்று தெரிய வருகிறது . இந்த வழக்கில், மேல்முறையீட்டாளர் மறு மின் இணைப்பு கோரும் கட்டிடம் சீர்திருத்தம் செய்வதாக அல்லாமல் முழுவதுமாக இடிக்கப்பட்டு புதிய கட்டிடமாக கட்டப்பட்டுள்ளது தெரிய வருகிறது

8.5 மேலும் எதிர்மனுதாரர் தனது வாதுரையில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

*"இந்நிலையில் மேற்படி மேல்முறையீட்டாளர் தற்காலிக மின்துண்டிப்பு செய்யப்பட்டிருந்த வணிக மின் இணைப்பை மறு மின்இணைப்பு கோரி மூன்று மாதம் கடந்த பின்பும் விண்ணப்பம் அளிக்காத நிலையில் ஓர் ஆண்டு கடந்து விட்டதால் கணினியில் மின்இனைப்பு எண் 08-421-006-182 உட்பட மேற்கண்ட ஐந்து மின்இணைப்புகளுக்கும் (Account close) கணக்கு முடிக்கப்பட்டுவிட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்."*

ஆனால் எதிர்மனுதாரர் தனது வாதுரையில் மின் இணைப்பு எண் 08-421-006-182 உட்பட ஆறு மின் இணைப்புகளும் கணக்கு முடிக்கப்பட்ட நிலையில் மறு இணைப்பு வழங்குவதாக தெரிவிப்பது முரண்பாடாக தெரிய வருகிறது . எனவே, மேல்முறையீட்டாளரின் கட்டிடத்திலிருந்த அனைத்து மின் இணைப்புகளும் கணக்கு முடிக்கப்பட்ட நிலையில் மீண்டும் மறு மின் இணைப்பு கோரும் மேல்முறையீட்டாளரின் கோரிக்கை ஏற்புடையதாக இல்லை.

8.6 இவ்வழக்கில் மேல்முறையீட்டாளர் சமர்ப்பித்த ஆவணங்களை ஆய்வு செய்ததில் வர்த்தக மின் இணைப்பு வழங்க உள்ளாட்சி அமைப்பின் தகுதி வாய்ந்த அதிகாரியிடமிருந்து கட்டிடம் முடிக்கப்பட்ட நிறைவு சான்றிதழ் அவசியம் என எதிர்மனுதாரர் கோரியுள்ளார் . எனவே, இது சம்பந்தமாக தமிழ்நாடு அரசு வழிகாட்டுதலின்படி உரிமதாரர் வழங்கியுள்ள விதிமுறைகள் கொண்ட CE/Commercial's Memo.No.CE/Comml/SE/Comml/EE3/AEE2/FPlg.per/D.139/2020, dt. 04.07.2020 என்ற

கடிதத்தை ஆராய விரும்புகிறேன். அதன் சம்பந்தப்பட்ட பத்திகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*“2. The Hon’ble Division Bench of High Court of Madras in its order dated 09-01-2018 in W.P. No. 14520 of 2017 had directed the utilities including TANGEDCO to follow the guidelines stipulated by the Government of Tamil Nadu.*

*3. While so, the Government of Tamil Nadu, in G.O. Ms. 18, Municipal Administration and Water Supply (MA.I), dated 04.02.2019, notified the Tamil Nadu Combined Development and Building Rules, 2019 and the same came into force with effect from 04-02-2019.*

*4. Rule 20 of the said Rules, 2019, states that for all buildings except residential building upto 12m in height not exceeding 3 dwelling units or 750 sq. m and all type of Industrial buildings, the applicant or owner or Power of Attorney Holder or Registered Developer and any other Person who is acquiring interest shall submit a completion report to obtain Completion Certificate, certifying that the building has been completed as per the approved plan, from the competent authority that has issued Planning Permit before getting service connections such as electric power connection, water supply sewerage connection.”*

****

*6. In this connection, the instructions were issued vide reference (5) cited based on the Tamil Nadu Combined Development and Building Rules, 2019. As there was a deviation from the said Rules, 2019, in the above instructions, the same is now withdrawn. In the light of the position stated in paragraphs 2 to 5 above, the following revised instructions are issued for strict adherence throughout the State, which will supersede all earlier instructions including based on the orders of the Hon'ble High Court, Madras:*

*(a) Except residential building upto 12m in height not exceeding 3 dwelling units or 750 sq.m and all type of Industrial buildings, all other buildings requires completion certificate before effecting electricity service connection(s). For the exempted buildings, the intending consumer shall not be insisted to produce Planning Permit and Completion Certificate for effecting electricity service connections.*

*(b) While registration of application for permanent electricity supply, except as far as the exempted buildings stated above, the application shall be accompanied with planning permit.*

*(c) In view of the provisions contained in section 175 of the Electricity Act, 2003, (Provisions of this Act to be in addition to and not in derogation of other laws), as far as the buildings coming under non-exempted category are concerned, on completion of the construction of the building, the temporary electricity service connection provided for construction purpose has to be disconnected and the permanent electricity service connection(s) shall be provided on receipt of the completion certificate as stated above. However, this will not apply to the exempted buildings and as such, for exempted buildings alone, the provisions contained in Regulation 39 of the Tamil Nadu Electricity Distribution Code, 2004 shall be followed.”*

8.7 மேற்கூறிய விதிமுறைகள் மெட்ராஸ் உயர்நீதிமன்றம் 09.01.2018 அன்று வழங்கிய உத்தரவின்படி தமிழ்நாடு அரசால் 04.02.2019 அன்று வழங்கப்பட்ட வழிகாட்டுதலின்படி உரிமதாரரால் நடைமுறை படுத்தப்பட்டுள்ளது. அந்த விதிமுறைகளின்படி 3 குடியிருப்பு அலகுகள் அல்லது 750 சதுர மீட்டருக்கு மிகாமல் அல்லது 12 மீ உயரமுள்ள குடியிருப்பு கட்டிடங்கள் மற்றும் அனைத்து வகையான தொழில்துறை கட்டிடங்கள் (exempted buildings) தவிர உள்ள அனைத்து கட்டிடங்களுக்கும் (Non–exempted buildings) மின்சார இணைப்பு வழங்குவதற்கு முன் கட்டிட நிறைவு சான்றிதழ் Completion Certificate அவசியம் என தெரிய வருகிறது . மேலும் மேல்முறையீட்டாளரின் கட்டிடம் முழுவதுமாக இடிக்கப்பட்டு புதிதாக ஒரு கடை மற்றும் மூன்று வீடுகள் கட்டியுள்ளதாக தெரிய வருகிற து. எனவே, இது Tamil Nadu Combined Development and Building Rules, 2019-இன்படி Completion Certificate under compulsory category-இன் கீழ் வரு வதால் மேல்முறையீட்டாளரின் கடைக்கு புதிய வர்த்தக மின் இணைப்பு வழங்க கட்டிட நிறைவு சான்றிதழ் அவசியம் என தெரிய வருகிறது.

8.8 இது தொடர்பாக கேட்புரையில் மேல்முறையீட்டாளரிடம் வினவியபோது கட்டிட நிறைவு சான்றிதழ் குறித்து தனக்கு முன்பே தெரிவித்திருந்தால் காலவிரையம் தவிர்க்கப்பட்டிருக்கலாம் என்றும் உரிய கட்டிட நிறைவு சான்றிதழ் தற்போது சமர்ப்பிக்க ஒப்புக் கொண்டுள்ளார். ஆனால், இவ்வழக்கில் மேல்முறையீட்டாளர் கணக்கு முடிக்கப்பட்டு மின் தடம் அகற்றப்பட்ட நிலையில் உள்ள மின் இணைப்பு எண் 08–421–006–182–ஐ மறு மின் இணைப்பு வழங்கு மாறு கோரியுள்ளார் . இது சம்பந்தமாக ஆணையம் M.O. No.1 of 2014 –ல் 13.10.2014–ல் வழங்கிய ஆணையை பார்வையிட விரும்புகிறேன். அந்த ஆணையின் சம்பந்தப்பட்ட பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*“TNERC/M.O. No.1 of 2014/Temporary Supply dated 13-10-2014*

*4. The Commission hereby orders as follows:*
*******
*(ii) In the cases of existing service connections requiring temporary supply for construction purpose and that are to be converted back to permanent supply, all in the same voltage level, only change in tariff shall be effected subject to obtaining of undertaking as specified in sub-regulation (1) of regulation 39 of the Distribution Code. However, if there exists more than one service connection in a premises, tariff change shall be effected to one service connection only and the consumer shall surrender all other service connections.*

மேற்கண்ட ஆணையின்படி ஏற்கனவே மின்னிணைப்புகள் உள்ள வளாகத்தில் கட்டுமான பணிக்காக தற்காலிக மின்னிணைப்பு கோரும் பட்சத்தில் தமிழ்நாடு மின்பகிர்மான விதி 39(1)–ன்படி மின்நுகர்வோரிடம் கட்டுமானபணி முடிந்தபின் தற்காலிக மின்னிணைப்பை நிரந்தர மின்னிணைப்பாக மாற்றிக்கொள் ளும் பொருட்டு ஓர் உறுதியேற்பு பெற்றுக்கொண்டு நிரந்தர மின்னிணைப்பை தற்காலிக மின்னிணைப்பிற்கான கட்டண வீதப்பட்டியலில் மாற்றிக்கொள்ளலாம் என அறியப்படுகிறது. மேலும் கட்டுமான பணிக்காக நிரந்தர மின்னிணைப்பை தற்காலிக மின்னிணைப்பாக மாற்றும்பொழுது அவ்வளாகத்தில் ஒன்று க்கும் மேற்பட்ட மின்னிணைப்புகள் இருக்கும் நேர்வில் தற்காலிக மின்னிணைப்பாக கட்டண விகிதம் மாற்றப்படும் மின்னினைப்பை தவிர்த்து உள்ள பிற மின்னிணைப்புகள் ஒப்புவிக்கப்பட வேண்டும் என அறியப்படுகிறது.

8.9 இவ்வழக்கில் 08–421–006–299 என்ற வீட்டு மின்இணைப்பு தற்காலிக (Temporary) மின்இணைப்பாக கட்டண விகித மாற்றம் செய்யப்பட்டு கட்டுமான பணிக்காக பயன்படுத்தப்பட்டுள்ளது. மேற்கண்ட பத்தியில் உள்ள தீர்வின்படி கட்டுமான பணிக்காக நிரந்தர மின்னிணைப்பின் வீதப்பட்டியை தற்காலிக மின்னிணைப்ற்கான வீதப்பட்டியாக மாற்றும்பொழுது அவ்வளாகத்தில் ஒன்றுக்கும் மேற்பட்ட மின்னிணைப்புகள் இருக்கும் நேர்வில் தற்காலிக மின்னிணைப்பாக கட்டண விகிதம் மாற்றப்படும் மின்னினைப்பை தவிர்த்து உள்ள பிற மின்னிணைப்புகள் ஒப்புவிக்கப்பட வேண்டும். மேலும், Tamil Nadu Combined Development and Building Rules, 2019-இன்படி கட்டுமான பணிகள் முடிவடைந்தபின் தற்காலிக மின்னிணைப்பை தொடர இயலாது என்பதால் ஏற்கனவே உரிமதாரரிடம் அளித்த உறுதியேற்பின்படி தேவைப்படும் உரிய சான்றிதழ் அளித்து அந்த தற்காலிக மின்னிணைப்பிற்கான வீதப்பட்டியை நிரந்தர மின்னிணைப்பிற்கான வீதப்பட்டியலுக்கு மாற்றிக்கொள் ளலாம். இவ்வழக்கை பொறுத்தவரை மேல்முறையீட்டாளரின் கட்டிடம் (Non–exempted buildings) என்ற வரையறைக்குள் வருவதால் மின்சார இணைப்பு வழங்குவதற்கு முன் கட்டிட நிறைவு சான்றிதழ் Completion Certificate சமர்பிப்பது அவசியமாகிறது. மேலும், மேல்முறையீட்டாளரின் கட்டிடம் முழுவதுமாக இடிக்கப்பட்டு புதிதாக கட்டப்பட்டுள்ள நிலையில் ஏற்கனவே இருந்த electrical wiring அனைத்தும் நீக்கப்பட்டு புதிய electrical wiring செய்யும்பட்சத்தில் அது புது மின் இணைப்பாகவே கருதப்பட வேண்டும். எனவே, ஒப்புவிக்கப்பட்டு கணக்கு

முடிக்கப்பட்ட மின்னிணைப்பு களை மறு மின்னிணைப்பு செய்வதற்கு வழிவகை இல்லை என தீர்வு செய்யப்படுகிறது.

8.10 மேற்கண்ட பத்திகளில் உள்ள தீர்வுகளின்படி மேல்முறையீட்டாளர் Tamil Nadu Combined Development and Building Rules, 2019-இன்படி உள்ளாட்சி நிர்வாகத்திடமிருந்து கட்டிடம் முடிக்கப்பட்டதற்கான பணி நிறைவு சான்றிதழுடன் புதிய மின் இணைப்பிற்கான உரிய விண்ணப்பம் சமர்ப்பிக்குமாறு அறிவுறுத்தப்படுகிறது.

9.0 **<u>கேள்வி 2–ற்கான தீர்வு:</u>**

9.1 இவ்வழக்கில் மேல்முறையீட்டாளர் மனஉளைச்சல் மற்றும் பண இழப்பு அனைத்திற்கும் சேர்த்து ரூ.50,000/– இழப்பீடாக வழங்குமாறு கோரியுள்ளார். ஆனால் இந்த கோரிக்கை மின்குறைதீர்மன்றத்தில் மனுதாரரால் வைக்கப்படவில்லை என தெரிய வருகிறது. மின்குறைதீர்ப்பாளரின் முன்பு சமர்ப்பிக்கப்படும் மனு மேல்முறையீட்டு மனு என்பதால் மின்குறைதீர்மன்றத்தில் மனுதாரரால் வைக்கப்பட்ட கோரிக்கைகள் சம்பந்தப்பட்ட வாதங்கள் மட்டுமே தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. குறைதீர் மன்றத்தின் நடவடிக்கைகள், குறைதீர் மன்றத்தில் சமர்ப்பிக்கப்படாத புதிய நிவாரணங்கள் அல்லது பணியாளர் ஒழுங்கு நடவடிக்கை சம்பந்தப்பட்ட கோரிக்கைகள் முதலியன மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளின்படி மின்குறைதீர்ப்பாளரின் தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

9.2 மேலும், மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளின் விதி 7(11)–ன்படி ஒழுங்குமுறை ஆணையத்தால் குறிப்பிடப்பட்டுள்ள செயல்திறன் அளவுகளில் நுகர்வோரின் சேவைத்திறன் அளவை உரிமதாரர் நிறைவேற்றாமை பற்றியதாக இருந்து, மன்றம் உரிமதாரர் தவறு செய்துள்ளார் என தெரிந்தால் நுகர்வோர் இழப்பீட்டு தொகையை பெறுவதற்கு தகுதியானவர் என்று முடிவு செய்யலாம் என குறித்துரைக்கப்பட்டுள்ளது.

9.3 இவ்வழக்கை பொறுத்தவரை மேல்முறையீட்டாளர் உரிய கட்டிட நிறைவு சான்றிதழ் சமர்ப்பிக்காத காரணத்தினால் எதிர்மனுதாரரால் உரிய நடவடிக்கை எடுக்க இயலவில்லை என்பது தெரிய வருகிறது. ஆகவே, மேல்முறையீட்டாளர் தன்னுடைய வர்த்தக மின் இணைப்பிற்கு மறு மின் இணைப்பு வழங்காத காரணத்தால் ஏற்பட்ட

மனஉளைச்சல் மற்றும் பண இழப்பு அனைத்திற்கும் சேர்த்து ரூ.50,000/– இழப்பீடாக வழங்குமாறு கோரும் கோரிக்கைகள் கருத்தில் கொள்ளப்படவில்லை. எனவே, மேல்முறையீட்டாளரின் இழப்பீட்டு கோரிக்கை என்னால் பரிசீலிக்கப்படவில்லை என்று தீர்வு செய்யப்படுகிறது.

**10.0 <u>முடிவுரை</u>:**

10.1 மேற்கண்ட பத்திகளில் உள்ள தீர்வின்படி மேல்முறையீட்டாளர் Tamil Nadu Combined Development and Building Rules, 2019-இன்படி உள்ளாட்சி அமைப்பிடமிருந்து கட்டிட நிறைவு சான்றிதழ் பெற்று சமர்ப்பிக்கும் நேர்வில் தமிழ்நாடு மின்சார பகிர்மான விதித் தொகுப்பின் விதி எண்.27–ன்படி நடவடிக்கை மேற்கொள்ளுமாறு எதிர்மனுதாரருக்கு உத்தரவிடப்படுகிறது.

10.2 மேற்கண்ட தீர்வுடன் இந்த மேல்முறையீட்டு மனு எண் 61/2023 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(ந. கண்ணன்)**
மின்குறைதீர்ப்பாளர்

"நுகர்வோர் இல்லையேல் நிறுவனம் இல்லை"
**"No Consumer, No Utility"**

பெறுநர்

1) திருமதி J. மணிமாலா,
க/பெ. C.ஜெயபால்,
859, திருவள்ளுவர் தெரு, அம்பூர்பேட்டை,
வாணியம்பாடி, திருப்பத்தூர் மாவட்டம்.

2) செயற்பொறியாளர்/ இ&ப/ வாணியம்பாடி,
திருப்பத்தூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
110 KV துணை மின் வளாகம்,
வாணியம்பாடி, வேலூர் – 635 751.

3) உதவி செயற்பொறியாளர்/ இ&ப / பகிர்மானம்/ வாணியம்பாடி,
திருப்பத்தூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
110 KV துணை மின் வளாகம்,
வாணியம்பாடி, வேலூர் – 635 751.

4) உதவி மின்பொறியாளர்/ இ&ப / நகரம்/வாணியம்பாடி,
திருப்பத்தூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
110 KV துணை மின் வளாகம், வேலூர் மெயின் ரோடு,
ஆலங்காயம், வாணியம்பாடி தாலுக்கா, வேலூர் – 635 751.

5) மேற்பார்வை பொறியாளர், – By Email
திருப்பத்தூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
2/4B, பாலம்மாள் காலனி, திருப்பத்தூர் – 635 601.

6) தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், – By email
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை, சென்னை – 600 002.

7) செயலாளர், தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், – By email
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.

8) உதவி இயக்குநர் (கணினி) – தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் இணையதளத்தில் வெளியிடுவதற்காக
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.